# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

## வலய மட்ட முன்னோடிப் பரீட்சை – 2016

### விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் II

தரம் :- 11 நேரம்:-2மணி

**முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களுமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

**1.வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை மூலம் மன அழுத்தத்தை குறைப்பதுடன் இயற்கைப் பீடை நாசினிகளைப் பயன்படுத்தி நஞ்சற்ற தாவர விளை பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

1) வீட்டுத் தோட்டத்தில் நேரடியாக களத்தில் நடக்கூடிய பயிர் வகைகள் நான்கு தருக?
2) வீட்டுத் தோட்டத்தில் பயிரிட உகந்த சொலனேசியே குடும்பப் பயிர்கள் இரண்டு தருக?
3) மேற்கூறிய பயிர்களைத் தாக்குகின்ற ஒரு பற்றீரியா நோயைக் குறிப்பிடுக?
4) வீட்டுத் தோட்ட மண் வளத்தைப் பேணுவதற்கு இடக்கூடிய சேதனப்பசளை வகைகள் இரண்டு தருக?
5) வீட்டுத் தோட்டம் மணல்பாங்கானதாகவும் சரிவானதாகவும் காணப்பட்டால் இந் நிலத்தில் பயனபடுத்தக்கூடிய நீர்ப்பாசன முறையினைத் தருக?
6) வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் பீடைகளைக் கட்டுப்படுத்த தயாரிக்கக்கூடிய இரசாயணமல்லாத பீடை நாசினி வகைகள் இரண்டு தருக?
7) வீட்டுத் தோட்டத்தை அலங்கரிக்கவும் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிகளை விரட்டும் நடக்கூடிய தாவரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
8) வீட்டுத் தோட்ட மண்ணில் ph பெறுமானம் 5 எனின் இம் மண்ணை நடுநிலையாக்க பயன்படுத்தும் பொருட்கள் இரண்டு தருக?
9) வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் வெண்டிப் பயிரில் தாக்கக்கூடிய வைரசு நோயொன்றைத் தருக?
10) அவுலக்கபோறா பூச்சியினால் பாதிக்கப்படக் கூடிய பயிரினங்கள் இரண்டு தருக?

**2. பெரும்போக சிறுபோக காலங்களில் கிடைக்கும் மழைவீழ்ச்சி முறைகளை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றிற்கேற்ப பயிர்செய்கை முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன.**

1) i) சிறு போக காலத்தில் முதலாம் இடைப்பருவ மழை தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி மழை கிடைக்கும் மாதங்களை முறையே தருக?
   ii) வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிமழை கிடைக்கும் மாதங்களை தருக?
2) i) பெரும் போக காலத்தில் பயிர்செய்கை மேற்கொள்வதற்காக பண்படுத்தல் மேற்கொள்ளும் காலம் யாது?
   ii) பெரும்போக சிறுபோக காலங்களில் நெல் பெருமளவில் அறுவடை செய்யும் மாதங்களை முறையே தருக?
3) சரிவான நிலமொன்றில் ஓடிவழியும் நீரின் வேகத்தைக் குறைத்து மண்ணரிப்பைத் தடுக்கும் முறைகள் நான்கு தருக?

**3. நாற்று உற்பத்தியாளர் ஒருவர் சிறப்பான முறையில் நாற்றுமேடைகள் அமைத்து நாற்று உற்பத்தியில் ஈடுபடத் தீர்மானித்தார்**

1) i) நாற்றுமேடைகளை அமைப்பதற்கான இடத்தினை தெரிவதில் பொருத்தமான காரணிகளைத் தருக?

ii) உயர் நாற்றுமேடையொன்றின் நீள அகலங்களை தருக?

2) i) நாற்றுமேடைகளைத் தொற்று நீக்கம் செய்யும் முறைகள் இரண்டு தருக?

ii) நாற்றுற்பத்தியில் நாற்றுமேடைப் பயிர்களைத் தாக்கும் பங்கசு நோயினைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவைடிக்கைகள் இரண்டு தருக?

3) நெரிடோக்கோ நாற்றுமேடை தயாரிப்பு பற்றி சுருக்கமாக விளக்குக?

**4. பயிர் விளைச்சலில் களைகள் நோய் பீடைகள் என்பன பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.**

1) i) பயிர் விளைச்சலில் களைகளின் தாக்கத்தினை பாதிப்பு ஏற்படாத மட்டத்தில் பேணுவதற்கு எடுக்கும் நடவெடிக்கைகள் நான்கு தருக?

ii) களைகளைக் கட்டுப்படுத்தும் பிரதான கட்டுப்படுத்தும் முறைகள் நான்கு தருக?

2) i) பங்கசு நோய்களின் பொதுவான அறிகுறிகள் நான்கு தருக?

ii) நெற்பயிர்களில் ஏற்படும் பங்கசு நோய்கள் இரண்டு தருக?

3) i) நெற்பயிரின் தாவரப்பகுதிகளிலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் இரு பூச்சி வகைகளைத் தருக?

ii) மேற்கூறிய பூச்சி ஒன்றினால் ஏற்படும் சேத அறிகுறிகள் இரண்டு தருக?

**5. வித்து தவிர்ந்த ஏனைய பதியப் பாகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இனப்பெருக்கமுறை பதியமுறை இனப்பெருக்கமாகும்.**

1 .i) வித்து மூலமான இனப்பெருக்கலின் அனுகூலங்கள் நான்கு தருக?

ii) பதியமுறை இனப்பெருக்கலின் அனுகூலங்கள் நான்கு தருக?

2. i) ஒட்டுதல் செய்வதற்காக ஒட்டுக்கட்டைத் தாவரத் தெரிவின் போது கவனிக்க வேண்டிய காரணிகள் நான்கு தருக?

ii) ஒட்டுதல் மேற்கொள்ளத் தேவையான உபகரணங்கள் இரண்டு தருக?

3. மாங்கன்றில் கிளைஒட்டினை மேற்கொள்ளும் விதம் பற்றி விளக்கப்படம் மூலம் விளக்குக?

**6. கால்நடை வளர்ப்பில் தொழுவங்களையும் கூடுகளையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்த்தக் கொள்ளலாம்.**

1. i) இலங்கையில் காலநிலை நிலைமைகளுக்கு ஏற்ப மாடு வளர்ப்பு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.இவற்றில் நான்கு வலயங்களின் பெயர்களைத் தருக?

ii) ஜேர்சி அயர்சயர் போன்ற தூய வர்க்கங்களை வளர்க்கக்கூடிய இரு வலயங்களின் பெயர்களைத் தருக?

ii) மேற்கூறிய பசுக்களிற்கு வழங்கக்கூடிய இரு செறிவுத் தீன் வகைகளைத் தருக?

2. i) முட்டைக்காக வளர்க்கப்படும் 100 கோழிகளுக்கான வளர்ப்பு முறை ஒன்றைத் தருக?

ii) மேற்கூறிய வளர்ப்பு முறையின் அனுகூலங்கள் நான்கு தருக?

iii) கோழிகளுக்கு அதிகளவில் ஏற்படும் வைரசு நோயொன்றைப் பெயரிடுக? இந்நோய்க்கான அறிகுறிகள் இரண்டு தருக?

**7. பயிர் விளைபொருட்கள் அறுவடையின் பின் நுகர்வோரால் நுகரப்படும் வரை குறிப்பிட்ட அளவானவை இழக்கப்படுகின்றன.**

1. i) பயிர் விளைபொருட்கள் அறுவடையின் பின் இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக?

ii) பயிர்களை அறுவடை செய்யும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் நான்கு தருக?

2. i) உணவு நஞ்சாதலால் ஏற்படும் அறிகுறிகள் நான்கு தருக?

ii) உணவு நற்காப்பக்காகப் பயன்படுத்தப்படும் இரசாயணப் பொருட்கள் இரண்டு தருக?

3. i) இரும்பு குறைபாட்டினால் ஏற்படும் பாதகமான நிலமைகள் இரண்டு தருக?

ii) விற்றமின் A குறைபாட்டின் அறிகுறிகள் இரண்டு தருக?